மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, "நோய் நாடி நோய்முதனாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்று வள்ளுவர் கூறியிருப்பதை எண்ணிப்பார்த்தால் சில நோய்கள் உடனடியாகத் தணிந்துவிட்டால் அது உடலுக்குக் கெடுதல் என்று தெரியும். அந்த நோய் நீண்டகாலம் இருந்து, முற்றிலும் குணமடைவதுதான் உடலுக்குப் பாதுகாப்பு. எல்லா நோய்களும் உடனடியாக தீர்ந்துவிடுவது நல்லது என்று சொல்ல முடியாது. தலைவலிக்கு மாத்திரை சாப்பிட போய் வேறு நோய்க்கு ஆட்பட வேண்டிவந்துவிட்டது என்று சிலர் சொல்வார்கள். அலோபதி முறையில் அப்படிப்பட்ட நிலை இல்லாமல் நீண்ட சிகிச்சைக்குப் பின்னால் குணம் கிடைக்கிறது. ஆகவே இந்த முறை தவறானது என்று சொல்லிவிடக் கூடாது. அதைப் பயன் படுத்துகிறவர்கள் அதிலே நம்பிக்கை வைக்கவேண்டும். அப்போது தான் இந்த மருத்துவமுறை மேலும் விரிவுபெற முடியும்; நாளடைவில் அதிகமான வரவேற்பு இருக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி நகராட்சி ஓமியோபதி மருத்துவ மனையை மூடிவிட அரசு உத்தேசிக்காது.

Mental Hospital at Madras

* 9. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state the details of the improvement proposed for the extension of the Kilpauk Government Mental Hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கடுமையான மனநோய் உள்ள மனநோயாளிக்கென ரூ. 2.20 லட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றை 1973-74-ல் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இம்மாநிலத்திலே வேறு பகுதிகளில் இருக்கிற மக்களுக்கும் வசதியாக இருக்கும்படியாக இந்த மனநோய் மருத்துவப் பிரிவு விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மனநோய் மருத்துவப் பிரிவு பெரிய அளவில் அமைந்திருப்பது சென்னையில் கீழ்ப்பாக்கத்தில்தான். அதைப்போல் பெரிய அளவிலான ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டாலும் அது முடிவுபெற 8 அல்லது 10 ஆண்டுகள்

1973 ஆகஸ்டு 4]

ஆகும். இப்போது மனநோய் சிகிச்சை பிரிவு ஒன்றை மாவட்ட மருந்தகங்களில் தொடங்க உத்தேசிக்கப்பட்டு, சில இடங்களில் தொடங்கப்பட்டிருக்கிறது. மேலும் மனநோய் சிகிச்சையில் 'டிப்ளமோ' தகுதி பெற்றவர்கள் இருந்தால் மாவட்ட மருந்தகங் களில் எல்லாம் இந்தப் பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, மனநோய் மருத்துவ மனைகளில் செவிலியர்கள் என்று சொல்லக்கூடிய பெண் நர்சுகளைப் போடுகின்ற காரணத்தினால் சில நேரங்களில் அசம்பாவிதங்கள் ஏற்பட்டு விடுகின்றன. சென்ற ஆண்டுகூட அப்படி ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நோயாளி ஒரு நர்சை கட்டிப்பிடித்து, கடித்து விட்டான். ஆகவே அம்மாதிரியான இடங்களில் ஆண் நர்சுகளைப் போட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு முடிவு செய்வது தவறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி மனநோய் பிடித்த நோயாளிதான் இந்தமாதிரி தவறு செய்தான் என்றல்ல ; மனநோய் இல்லாத மற்றவர்களும் இந்தமாதிரி செய்தார்கள் என்று நாம் கேள்விப்படுகிறோம் ; பத்திரிகையில் பார்க்கிறோம். மனநோயாளிகளுக்கு ஒரு ஆறுதல் கிடைக்கவேண்டும். அவர் களுக்கு அன்போடும் பண்போடும் மருந்துகள், உணவுகள் வழங்கப்படவேண்டும். அதைத் தாய்மை உள்ளம் படைத்த செவிலியர்களால்தான் செய்ய முடியும். செவிலியர்கள் அவர் களுக்கு அன்போடு உணவும் மருந்தும் கொடுக்கும்போது அவர் களுக்கு ஆறுதல் ஏற்படுகிறது. அதேமாதிரி ஆண் செவிலியர்களால் செய்ய முடியாது.

Buildings for Government Hospital at Komarapalayam

*10. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pltased to state—

(*a*) whether the Marichettiar Trust in Komarapalayam have donated buildings for housing the Government Hospital; and

(*b*) if so, the details thereof?